11.02.2026

O.S.No. 335/2021

PW1– ராஜலெட்சுமி– க/பெ. முத்துகிருஷ்ணன்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 11.02.2026

குறுக்கு விசாரணை தொடர்ச்சி : ( வாதி /பிரதிவாதி தரப்பில்)

10. என் வீட்டிற்கு தெற்கேயுள்ள மைக்கேல் வீட்டிற்கு வடக்கே எனக்கு தென்வடலாக 22 அடி உண்டு என்றால் சரிதான். அதை மீறி எந்த அளவும் கிடையாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.11 ஆவணத்திலும் தென்வடல் அளவு 22 அடி காண்பித்துள்ளேன் என்றால் சரிதான்.

11. வா.சா.ஆ.11 ஆவணத்தில் கண்ட GH பகுதிக்கு மேற்கேயும் பொதுபாதை தொடர்ச்சியாக செல்கிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ஆவணத்தில் கண்ட B பாயிண்டுக்கு வடக்கே கதவு ஒன்று பொதுப்பாதையை நோக்கி உள்ளது என்றால் சரிதான். எனது பிராதிலும் வா.சா.ஆ.11 லும் மேற்படி கதவை மறைத்து தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. HI பகுதிக்கு வடக்கே முழுவதும் எனது வீடு என்று காண்பித்து வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு மேற்கே தென்வடல் தெரு உள்ளது என்றால் தெரு உள்ளது.

12. KL பகுதிக்கு இடைப்பட்ட நடைபாதையாக காட்டப்பட்ட பகுதியானது மேற்கேயுள்ள தென்வடல் தெருவை தொடர்ச்சியாக சென்றடைகிறது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

13. நீதிமன்றத்திலிருந்து வந்து, நீதிமன்ற ஆணையர் வந்து ஸ்தல பார்வை செய்தார் என்றால் சரிதான். பிரதிவாதியால் தாக்கல் செய்த வரைபடமும், ஆணையர் வரைபடமும் ஒரேபோல் உள்ளது என்றால் சரிதான்.

14. வா.சா.ஆ.11 ஆவண வரைபட அமைப்பில் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று காண்பிக்கப்பட்ட இடத்தில் வடபுறம் ஒருவீடு, தென்புறம் ஒரு வீடு என உள்ளது என்றால் சரிதான்.

15. **நீதிமன்ற கேள்வி –** ஆதியில் எனது மாமனாருக்கு 2 வீடுகள் இருந்தது, வடக்கே எனது மாமனாரும், தெற்கே எனது நாத்தனாரும் இருந்தனர். எங்கள் வீட்டிற்கு கிழக்கே ஒரு மண்சுவர் இருந்தது, பின்பு அந்த சுவர் நீக்கப்பட்டது, எதற்காக என்றால் என் மாமனாரும், நாத்தனாரும் பயன்படுத்திக்கொள்வதற்காக இடிக்கப்பட்டது. மேற்கே தெரு இருந்தது. எனது மாமனார் வீட்டிற்கு எனது நாத்தனார் வரவேண்டுமென்றால் ஒன்று மேற்கே வரவேண்டும் அல்லது கிழக்கே வரவேண்டும். கிழக்கேயுள்ளது பொது பாதை கிடையாது.

16. 1ம் தபசில் சொத்திற்கு வடக்கே ஒருபொதுப்பாதை உள்ளது, அதற்கு வடக்கே பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீடானது பிரதிவாதிகளின் தாத்தா ராமசாமி நாயுடு 17.09.1950 ல் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

17. வா.சா.ஆ.12 ஆவணத்தில் பிரதிவாதிகளின் இடத்திற்கு நான்கு மால்கள் விவரிக்கும்போது சங்கரப்பநாயுடு பொதுச்சுவருக்கும் வடக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. வா.சா.ஆ.12 ஆவணத்தின்படி எங்கள் இடமானது எங்களது பொதுச்சுவருடன் முடிந்துவிடுகிறது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12 ஆவணத்தின் முன்கிரையதாரர்கள் எங்கள் வீட்டையும் சேர்த்து சங்கரப்ப நாயுடுவிற்கு எழுதிக்கொடுத்துவிட்டார், அந்தவிவரம் தெரிந்தும் எனது கணவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுத்தார். நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. அவர்களின் பத்திரமும் செல்லாது. இந்த வழக்கு சொத்து சம்பந்தமாக வேறு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

18. வா.சா.ஆ.12 ஆவணத்தின்படி பிரதிவாதிகள் அனுபவம் செய்கிறார்கள் என்றால் சரிதான். எங்களிடமும் பிரச்சனை செய்யவில்லை, நாங்களும் 1,3ம் தபசில் சொத்தை அனுபவம் செய்துவருகிறோம். வா.சா.ஆ.12 ஆவணம் ஏற்படும் சமயத்தில் அங்கு பழைய வீடுஇருந்தது என்றால் சரிதான். மேற்படி பழைய வீட்டைஇடித்து புதுவீடுகட்டும்போது தான் எங்களுக்கும், பிரதிவாதிகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான்.

19. வா.சா.ஆ.11 ஆவணத்தில் EF பகுதியில் பிரதிவாதிகள் வீடு கட்டியதால் தான் பிரச்சனை என்றால் சரிதான், அது பொதுமுற்றம் ஆகும். எனது கணவர் பிரதிவாதிகள் மீது பாதை சம்பந்தமாக புகார் கொடுத்தார் என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு என் கணவர் முன்பு

செல்லவில்லை, பிரதிவாதிகள் தான்சென்றார்கள். பிராதில் சொல்லியுள்ள விவரம் சரிதான். பிரதிவாதிகள் தான் முதலில் காவல்நிலையம் சென்றார்கள்.

20. காவல்நிலையத்தில் புகார் கொடுத்தற்கு உரிமையியல் பிரச்சனை என்பதால் நிலஅளவையர் அல்லது நீதிமன்றம் மூலம் தீர்த்துக்கொள்ளுங்கள் என கூறிவிட்டனர் என்றால் சரிதான். அதற்கு பின்பு நில அளவையர் வைத்து அளந்து பார்த்தோம் என்றால் சரிதான். நில அளவையர் அளந்து பார்த்தபோது EF பகுதி பிரதிவாதி வசம் உள்ளது என்றால் சரிதான், ஆனால் அது தவறாக உள்ளது. நிலஅளவீடுக்கு மேல்முறையீடு எதுவும் செல்லவில்லை என்றால் எனது கணவர் நடவடிக்கை எடுத்திருப்பார், எனக்கு அதுபற்றி தெரியவில்லை.

21. பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட வரைபடத்தின்படி 1ம் தபசில் சொத்திற்கு வடக்கேயுள்ள பாதை மேற்கேயுள்ள தெரு வரை செல்லாது அது தவறாக உள்ளது. எதிர்வழக்குரையில் PQ பகுதியில் சுவர் கட்டி சேர்ந்தணையாக எனது கணவர் அனுபவித்து வருவதாக கூறிவிட்டார் என்றால் சரியல்ல, அது முற்றிலும் தவறான தகவலாகும். வீட்டு வாசலை அடைக்க யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். மேற்படி சங்கதிகளை கொண்டுதான் எனது கணவர் ஒரு ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார், தற்போது வம்பாக இந்த வழக்கையும் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. பிரச்சனைக்குரிய வீட்டின் கதவு எண்.173 என்று ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அதைபோல் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட வீடு கதவு எண்.174 என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

22. DEHI பகுதி 1ம் தபசில் சொத்து என அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் HI பகுதியின் அளவு 7.2 மீட்டர். அது அடிக்கணக்கில் 23.622 என்றால் எங்களது அளவு 22 அடிதான், அது தவறாக உள்ளது. மேற்படி ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளோம். EH பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல, எங்களுக்கு நடைபாதை உரிமையுள்ளது, நாங்கள் 120 ஆண்டுகளாக அனுபவித்து வருகிறோம். மேற்படி உரிமையுடன் அனுபவத்தை நிரூபிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆவணங்கள் தான் அதற்கு சாட்சியாக தாக்கல் செய்துள்ளோம்.

23. ஸ்தலத்தில் உள்ள அமைப்புக்கு விரோதமாக வா.சா.ஆ.11 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எங்களுக்கு வடக்கேயுள்ள கிழமேல் பாதையில் எந்தவித உரிமையும் கிடையாது என்றாலும், வம்பாக வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல, மேற்கே நிலை விடவில்லை, வடக்கே நிலை உள்ளது.

24. எனது வரைபடப்படி EF பகுதியுடன் எனது வடக்கு அத்து முடிகிறது என்றால் சரியல்ல. எனவே நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி